# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1837/27- 2013 නොවැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.11.21

*1837/27 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சுங்க அறிவித்தல்

சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)

**2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சுங்கத் திருத்தச் சட்டத்தின் "உ" அட்டவணையின் 10 ஆம் உறுப்புரையின் கீழான கட்டளை**

பாவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான பெறுமதியைக் கணிப்பதற்கான பெறுமானத்தேய்வு அட்டவணை

2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்கச் (திருத்தம்) சட்டத்தின் ''உ'' அட்டவணையின் 10 ஆம் உறுப்புரையின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் பொருள் இறுப்புப் பட்டியல் தலைப்பு இலக்கங்கள் 87.01, 87.02, 87.03, 87.04 மற்றும் 87.11 ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்படும் இறக்குமதி செய்யப்பட்ட, பாவிக்கப்பட்ட வாகனங்களின் பெறுமதி (விலை) கணிப்பீடானது 2013.11.22 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்படுவதனைப் போன்று பிரயோகிக்கப்படல் வேண்டும் என பிரகடனப்படுத்துகின்றேன்.

பாவனைக் காலங்களின் கணக்கீட்டுக்காக வாகனத்தின் முதற் பதிவுத் திகதிக்கும் கப்பலேற்றப்பட்ட திகதிக்கும் (வார்நாமப்பத்திர திகதிக்கும்) இடைப்பட்ட காலப்பகுதி கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

ஆண்டும் மாதமும் மட்டும் கொடுக்கப்பட்டிருப்பின் அடுத்த மாதத்தின் முதற் திகதியானது முதற் பதிவுத் திகதியாகக் கணிக்கப்படும்.

ஆண்டு மாத்திரம் கொடுக்கப்பட்டிருப்பின் அந்த ஆண்டின் யூலை 01 ஆந் திகதியானது முதற் பதிவுத் திகதியாகக் கணிக்கப்படும்.

**பாவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான பெறுமதியைக் கணிப்பதற்கான பெறுமானத்தேய்வு அட்டவணை**

| பாவனைக் காலம் | தேய்மானம் செய்யப்பட்ட எப்.ஓ.பி. (FOB) பெறுமதி |
|---|---|
| 1 வருடத்துக்கு மேற்பட்டவை 2 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 90% |
| 2 வருடத்துக்கு மேற்பட்டவை 3 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 80% |
| 3 வருடத்துக்கு மேற்பட்டவை 4 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 75% |
| 4 வருடத்துக்கு மேற்பட்டவை 5 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 65% |
| 5 வருடத்துக்கு மேற்பட்டவை 6 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 60% |
| 6 வருடத்துக்கு மேற்பட்டவை 7 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 55% |

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**பாவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான பெறுமதியைக் கணிப்பதற்கான பெறுமானத்தேய்வு அட்டவணை** *(தொடர்ச்சி )*

| *பாவனைக் காலம்* | *தேய்மானம் செய்யப்பட்ட எப்.ஓ.பி. (FOB) பெறுமதி* |
|---|---|
| *7 வருடத்துக்கு மேற்பட்டவை 8 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை* | *50%* |
| *8 வருடத்துக்கு மேற்பட்டவை 9 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை* | *45%* |
| *9 வருடத்துக்கு மேற்பட்டவை 10 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை* | *40%* |
| *10 வருடத்துக்கு மேற்பட்டவை* | *35%* |

பாவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் பெறுமதி (விலை) கணிப்பீட்டு முறையானது இவ்வறிவித்தலின் (I) ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கட்டளையானது 2013.11.22 ஆந் திகதி முதல் 2 வருட காலப்பகுதிக்கு பயன்வலுப் பெறும்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி
(நிதி, திட்டமிடல் அமைச்சர்).

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2013, நவெம்பர் 21.

அட்டவணை (I)

**பாவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான பெறுமதியைக் (விலை) கணிப்பிடுதல்**

87.01, 87.02, 87.03, 87.04 மற்றும் 87.11 என்ற பொருள் இறுப்புப் பட்டியல் தலையங்கங்களின் கீழ் பகுக்கப்பட்டுள்ள பாவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் பெறுமதியினைப் பின்வருவனவற்றின் கூட்டுத்தொகையைக் கவனத்திற்கொண்டு கணிப்பீடு செய்யப்படவுள்ளது.

(அ) கீழே (i) இலும் (ii) இலும் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியில் ஆகக் கூடிய பெறுமதி:

(i) (iii) இல் குறிப்பிடப்பட்டவாறான பெறுமானத் தேய்வின் பெறுமதி,
(ii) விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கப்பற்தளம் மட்டும் உள்ளதான பெறுமதி,
(iii) சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறாகவும் மற்றும் பெறுமானத்தேய்வு அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறாகவும் கணக்கிடப்படும் பெறுமானத்தேய்வுப் பெறுமதியானது புதியதொரு மோட்டார் வாகனத்தின் எப்.ஓ.பி. பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கைத் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவு;

(இ) ஏற்றல், இறக்கல் மற்றும் கையாளுதலோடு இணைந்த இலங்கைத் துறைமுகத்திற்கு கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் செலவு; மற்றும்

(ஈ) இலங்கைத் துறைமுகத்திற்கான காப்புறுதிச் செலவினம்.

12-252

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.